දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister: 2784832, 2784807, 2784825

ලේකම් / செயலாளர் / Secretary: 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office: 2785141-50, **Fax**: 2784846

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No. ..............................

**අධ්‍යාපන අමාත්‍යාංශය**
**கல்வி அமைச்சு**
**Ministry of Education**

'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටෙ
බත්තරමුල්ල
'இசுருபாயா' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை
பத்தரமுல்ல
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte
Battaramulla

මගේ අංකය / எமது இல. / My No.: ED/01/12/02/06/02

දිනය / திகதி / Date: 2014.05.16

சுற்றறிக்கை இல 16/2014

சகல மாகாண பிரதம செயலாளர்,
சகல மாகாண கல்விச் செயலாளர்கள்
சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல கோட்டக்கல்வி / பிரதம கல்விப் பணிப்பாளர்
சகல அரச மற்றும் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளின் பொறுப்பாளர்கள்

**இடைநிலைப் பாடவிதான மறுசீரமைப்பு - 2015 தொடக்கம்**

அறிவுசார் சமூகத்தில் அறிவு துரித கதியில் மாற்றமடைந்து செல்வதுடன், கோளமய செயற்பாடுகள் ஊடாக இம் மாற்றங்கள் எமது நாட்டில் துரித கதியில் விருத்தி அடைந்து செல்கின்றது. இம் மாற்றங்களை எதிர்கால சந்ததியினருக்கு வழங்க வேண்டும் என்பதனால் பாடசாலை பாடவிதானமும் சமகால தேவைக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட வேண்டும். சகல 8 வருடங்களுக்கு ஒரு முறை பாடசாலை பாடவிதானத்தை முறுசீரமைக்கப்பட வேண்டியதன் தேவை ஏற்றுக்கொள்ளப்பட்டமையினால் 2007 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட கல்வி மறுசீரமைப்பின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட பாடசாலை பாடவிதானத்தை மறுசீரமைக்க வேண்டிய காலம் எழுந்துள்ளது எனவே கல்வி அமைச்சு, தேசிய கல்வி ஆணைக்குழு சபை மற்றும் தேசிய கல்வி நிறுவகத்தின் பரிந்துரைக்கமைய 2015ஆம் ஆண்டு தொடக்கம் இடைநிலைத்தரங்கள் (6-11) பாடவிதான மறுசீரமைப்புககளை அறிமுகப்படுத்த கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய 2006.03.07 ஆம் திகதிய இலக்கம் 2006/9 கொண்ட சுற்றறிக்கை மற்றும் 2007.03.07ஆம் திகதிய இலக்கம் 2007/6, 2008.04.21 ஆம் திகதி இலக்கம் 2008/12 மற்றும் 2008.09.15 ஆம் திகதிய இலக்கம் 2008/12(i) கொண்ட சுற்றறிக்கை மறுசீரமைப்புகளுக்கு மேலதிகமாக இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது.

இச்சுற்றறிக்கை மூலம் இடைநிலை தரங்களின் பாடங்கள் மற்றும் கால எல்லையில் மாற்றங்கள் ஏற்படுவதில்லை என்பதுடன், பாட உள்ளடக்கம் மாத்திரம் மறுசீரமைக்கப்படும்.

2015ஆம் ஆண்டில் 6 மற்றும் 10ம் தரங்களுக்காகவும், 2016 ஆம் ஆண்டில் 7 மற்றும் 11ம் தரங்களுக்காகவும், 2017 ஆம் ஆண்டில் 8 ஆம் தரத்திற்காகவும், 2018 ஆம் ஆண்டில் 9ஆம் தரத்திற்காகவும், இம் மறுசீரமைக்கப்பட்ட பாடவிதானங்கள் அமுல்படுத்தப்படும். மேலும் பழைய பாடவிதானம் 2015 ஆம் அண்டில் 7,8,9 மற்றும் 11 தரங்களுக்காகவும், 2016ஆம் ஆண்டில் 8 மற்றும் 9 தரத்துக்காவும், 2017 ஆம் ஆண்டில் 9 தரத்துக்காவும் அமுலில் இருக்கும். இது கீழ் குறிப்பிட்ட அட்டவணை மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

| ஆண்டு / தரம் | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
|---|---|---|---|---|---|---|
| 2015 | NS | OS | OS | OS | NS | OS |
| 2016 | NS | NS | OS | OS | NS | NS |
| 2017 | NS | NS | NS | OS | NS | NS |
| 2018 | NS | NS | NS | NS | NS | NS |

NA – New syllabus (புதிய பாட விதானம்)

OS – Old syllabus (பழைய பாட விதானம்)

இம் மறுசீரமைக்கப்பட்ட பாடவிதானங்களை அமுல்படுத்தும் போது பாடசாலை நேரசூசி முன்னர் இருந்தவாறு தயாரிக்கப்பட வேண்டியதுடன், 2015 ஆம் தொடக்கம் பாடசாலைகளில் அமுல்படுத்தப்பட்ட இம் மறுசீரமைக்கப்பட்ட பாடவிதானத்தை தொடரும் மாணவர்கள் முதல் தடவையில் 2016ஆம் ஆண்டில் கல்விப் பொதுத் தராதர (சா/த) பரீட்சைக்கு தோற்றவுள்ளனர், உரிய மறுசீரமைப்புகளுக்கு அமைய செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்துகிறேன்.

ஆரம்ப தரங்களின் பாடவிதான மறுசீரமைப்புக்கள் 2016ஆம் அண்டு தொடக்கம் ஆரம்பிக்க தீர்மானிக்கப்படுகின்றது.

அனுர திசாநாயக்க
கல்வி செயலாளர்,
கல்வி அமைச்சு.

பிரதிகள் -

01. தலைவர், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு சபை - த.செ.த
02. தலைவர், தேசிய கல்வி ஆணைக்குழு சபை - த.செ.த
03. பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம் - த.செ.த
04. பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம் - த.செ.த
05. கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம், கல்வி வெளியீட்டு திணைக்களம் - த.செ.த